# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8073089

C 18/XII/2018

1. District : சேலம். PS: ஊதகமண்டலம் Year: 2018 FIR No.: Date: 26.11.2018
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: U/s 7(a).
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல்
Date to : நாள் வரை 1) 16.11.2018 பகல் சுமார் 12.00 மணி
2) 23.11.2018 பகல் சுமார் 12.00 மணி
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல்
Time to : நேரம் வரை 3) 23.11.2018 மாலை சுமார் 5.10 மணி

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.11.2018
Time : நேரம் 10.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.11.2018
Time : நேரம் 10.00 hrs.

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 2½ கி.மீ கிழக்கே.
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address : முகவரி சேலம் மாநகராட்சி நிர்வாக பகுதியின் உதவி திட்டமிடல் செயற்பொறியாளர் அலுவலகம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. M. அரசு
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. முத்துசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/2018
(d) Nationality : நாட்டினம் இந்தியர்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation தொழில் வெள்ளி தொழில்/ வியாபாரம்
(g) Address : முகவரி 50, பெரு வெள்ளாளர் தெரு, கொண்டலாம்பட்டி, சேலம் - 10.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திருமதி. சண்முகவாணி, பொறியாளர், திட்டமிடல், சேலம் மாநகராட்சி.
2) திரு. உ...மான், கிளார்க், திட்டமிடல் செயற்பொறியாளர் அலுவலகம்.
சேலம் மாநகராட்சி, சேலம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.18(HCL-12)

சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 26.11.2018–ம் தேதி காலை 10.00 மணிக்கு M.அரசு S/o முத்துசாமி, 50, மேட்டு வெள்ளாளர் தெரு, கொண்டலாம்பட்டி, சேலம்–10 என்பவர் சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி கொடுத்த கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புதல் M.அரசு, S/o முத்துசாமி, 50, மேட்டு வெள்ளாளர் தெரு, கொண்டலாம்பட்டி, சேலம்.10. பெறுதல் துணைக்காவல் கண்காணிப்பாளர், லஞ்ச ஒழிப்பு பிரிவு, சேலம். அய்யா வணக்கம், நான் கொண்டலாம்பட்டி மேட்டு வெள்ளாளர் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் வெள்ளி கொலுசு வியாபாரம் செய்து வருகிறேன். சேலம் மாநகராட்சி அன்னதானப்பட்டி கிராம சர்வே எண்கள். 82/11, 82/12 மற்றும் 82/14 ஆகிய மூன்று சர்வே எண்களுக்கும் சம்மந்தப்பட்ட நிலத்தில் என் அம்மா பவளாயி பெயரில் 2000 சதுர அடிகள் கொண்ட ஒரு வீட்டு மனை நிலம் இருந்தது. எனது அம்மா அந்த நிலத்தை எனக்கு தானமாக கொடுக்க முடிவு செய்து கடந்த 3.10.2012ம் தேதி எனது பெயரில் தாதகாப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பதிவு செய்து கொடுத்தது. அந்த மனைநிலம் அரசு அங்கீகாரம் பெறப்படாமல் இருந்தது. சமீபத்தில் அரசு அங்கீகாரமற்ற மனைநிலங்களை முறைப்படுத்த அரசு அறிவிப்பு வெளியிட்டதன் அடிப்படையில் எனது வீட்டு மனை நிலத்திற்கு அரசு அங்கீகாரம் பெறவேண்டி கடந்த 16.4.2018ம் தேதி நகர ஊரமைப்பு துறை ஆன்லைனில் ரூ.500/- செலுத்தி பதிவு செய்தேன். அதன் பிறகு சூரமங்கலம் சுப்ரமணிய நகரில் உள்ள சேலம் உள்ளூர் திட்ட குழுமம் அலுவலகத்தில் எனது நிலம் சம்மந்தப்பட்ட ஆவணங்களை வழங்கினேன். மேற்படி அலுவலகத்தில் எனது விண்ணப்பத்தின் பேரில் நடவடிக்கை எடுத்து சேலம் மாநகராட்சி அலுவலகத்தில் வரன்முறை படுத்துதல் கட்டணம் மற்றும் மாநகராட்சிக்கான வளர்ச்சி கட்டணம் ஆகியவற்றை செலுத்தி வரன்முறை படுத்திக்கொள்ள கடந்த 25.7.2018ம் தேதி சேலம் மாநகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு எனக்கு ஒரு நகல் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வரன்முறை படுத்துதல் கட்டணமாக ரூ.18,600/-ஐ அரசு கரூவூல சலான் மூலம் ஸ்டேட் பேங்கிலும், வளர்ச்சி கட்டணம் ரூ.93,000/- ஐ சேலம் மாநகராட்சி அலுவலகத்திலும் செலுத்தும்படி 8.10.2018ம் தேதியிட்ட சேலம் மாநகராட்சி

அலுவலகத்தில் இருந்து வந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன்படி கடந்த 2.11.2018-ம் தேதி சேலம் மாநராட்சி அலுவலக மூன்றாவது தளத்தில் உள்ள திட்டப்பிரிவு செயற்பொறியாளர் அலுவலகத்தில் கிளார்க் உஸ்மானை பார்த்து எனக்கு வந்த கடித விபரங்களை சொல்லி பணம் செலுத்துவது குறித்து கேட்டபோது அவர் எனது பெயர் விபரத்தையும் நான் செலுத்த வேண்டிய தொகையையும் ஒரு விண்ணப்ப படிவத்தில் எழுதி என்னிடம் கொடுத்து அதில் கையெழுத்து போடச்சொல்லிவிட்டு அதில் குறிப்பிட்ட தொகைகளை செலுத்திவிட்டு வரும்படி கூறினார். அவர்சொன்னபடி மேற்படி கட்டணங்களை செலுத்திவிட்டு கிளார்க் உஸ்மான் அவர்களிடம் நான் பணம் செலுத்திய ரசீதுகளை அந்த விண்ணபத்துடன் இணைத்து கொடுத்தேன். அதை பெற்றுக்கொண்ட அவர் 10 நாட்கள் கழித்து தன்னை வந்து சந்திக்கும்படி சொல்லி அனுப்பினார். அதன்பேரில் நான் மீண்டும் 10 நாட்கள் கழித்து கிளார்க் உஸ்மானை சந்தித்து அப்ரூவல் ஆர்டர் குறித்து கேட்டேன். அதற்கு அவர் இன்னும் ஆர்டர் ரெடியாகவில்லை இரண்டு மூன்று நாட்கள் கழித்து வரும்படி சொன்னார். அவர் சொன்னபடி நான் 16.11.2018ம் தேதி மதியம் சுமார் 12 மணியளவில் சேலம் மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று திட்ட பிரிவு அலுவலகத்தில் கிளார்க் உஸ்மானை சந்தித்து எனது வீட்டுமனை அப்ரூவல் குறித்து கேட்டேன். அதற்கு அவர் உங்களது உத்தரவு ரெடியாகிவிட்டது. அந்த உத்தரவை பெறவேண்டுமென்றால் இஞ்ஜினியர் கலைவாணிக்கும் தனக்கும் சேர்த்து மொத்தம் ரூ.5,000/– கொடுக்க வேண்டும் என்று சொல்லி பணத்தை கொடுத்துவிட்டு உத்தரவை வாங்கிக்கொள்ளுங்கள் என்று சொன்னார். நான் அவரிடம் அரசுக்கு செலுத்த வேண்டிய பணத்தை கடன் வாங்கித்தான் கட்டினேன், மேற்கொண்டு ரூ.5,000/- என்னால் கொடுக்க இயலாது என்று சொன்னதற்கு அவர் ரூ.5,000/- பணம் இல்லாமல் அப்ரூவல் ஆர்டரை தரமுடியாது என்றும், இஞ்ஜினியர் கலைவாணியும் பணம் வாங்காமல் அப்ரூவல் ஆர்டரை கொடுக்க கூடாது என்று தன்னிடம் சொல்லியுள்ளார் என்றும் சொன்னார். நான் அவ்வளவு தொகை கொடுக்க இயலாது என்று சொன்னபோது அவர் வேண்டுமென்றால் கலைவாணி மேடத்தை நேரில் பார்த்து கேட்டுக்கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார். அதன்பிறகு ஓரிருமுறை சேலம் மாநகராட்சி அலுவலகம் சென்று இஞ்ஜினியர் கலைவாணியை பார்க்க முயற்சித்த போது அந்த நேரங்களில் அவர் அலுவலகத்தில் இல்லை. மீண்டும் 23.11.2018ம் தேதி மதியம் சுமார் 12

மணியளவில் மேற்படி அலுவலகத்திற்கு சென்றபோது கிளார்க் உஸ்மான் அங்கிருந்தார். அவரிடம் எனது அப்ரூவல் சம்மந்தமாக இஞ்ஜினியர் கலைவாணியை பார்க்க வேண்டும் என்று சொன்னேன். உஸ்மான் என்னிடம் நான் சொன்ன பணம் ரூபாய்.5,000/- கொண்டு வந்திருக்கிறீர்களா என்று கேட்டார். நான் அவரிடம் அவ்வளவு தொகை கொடுக்க முடியாததால்தான் அம்மாவிடம் கேட்கலாம் என்று வந்தேன் என்று சொன்னேன். அதற்கு அவர் இஞ்ஜினியர் அம்மா இப்போ வெளியே கிளம்பிக் கொண்டிருக்கிறார். இப்போது பேசமுடியாது. எனவே மாலை 5 மணிக்கு வந்து அவரை பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார். அதன்படி நான் 23.11.2018ம் தேதி மாலை சுமார் 5 மணியளவில் சேலம் மாநகராட்சி அலுவலகம் சென்று இஞ்ஜினியர் கலைவாணியின் அறைக்கு முன்பு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த கிளார்க் உஸ்மானை பார்த்து இஞ்சினியர் அம்மா உள்ளே இருக்காங்களா என்று கேட்டேன். அதற்கு அவர் 10 நிமிடத்தில் வந்து விடுவார், வந்தவுடன் போய் பாருங்கள் என்று சொன்னார். நானும் சற்று நேரம் காத்திருந்தேன். சுமார் 10 நிமிடம் கழித்து இஞ்ஜினியர் கலைவாணி அலுவலகம் வந்து அவரது அறைக்குள் சென்றார். நான் சிறிது நேரம் கழித்து அவரை உள்ளே சென்று பார்த்து எனது வீட்டுமனை அப்ரூவல் பற்றி கேட்டேன். அவர் எனது பெயர் விபரங்களை கேட்டுவிட்டு உங்களது ஆர்டர் ரெடியாகிவிட்டது, கிளார்க் உஸ்மான் சொல்லும்படி செய்துவிட்டு உத்தரவை வாங்கிக்கொள்ளுங்கள் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான் உங்களுக்கும் உஸ்மான் சாருக்கும் சேர்த்து ரூபாய்.5,000/- கொடுக்க வேண்டும் என்று உஸ்மான் கேட்டார், என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது என்று சொன்னேன். அதற்கு அவர் உங்களிடம் கேட்கும்படி சொல்லிவிட்டார். அதனால்தான் உங்களிடம் கேட்டுப்பார்க்கலாம் என்று வந்தேன் என்று சொன்னேன். அதற்கு இஞ்ஜினியர் கலைவாணி என்னிடம் உங்ககிட்ட மட்டும்தான் ரூபாய்.5,000/- கேட்கிறோம், மற்றவங்ககிட்டலாம் அதைவிட அதிகமாதான் வாங்கிக்கிட்டிருக்கிறோம். அதனால் அதை கொடுத்துவிட்டு உத்தரவை வாங்கிக்கொள்ளுங்கள் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டார். அதற்கு நான் ஏற்கனவே கடன் வாங்கித்தான் கவர்மெண்டிற்கு கட்டவேண்டிய பணத்தை கட்டினேன். அதனால் உத்தரவு கொடுக்க உதவி செய்யுங்கள் என்று கெஞ்சிக்கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுக்காமல் வேலையாகாது, அந்த பணத்தை திங்கள்கிழமை கொண்டு வந்து கொடுத்துவிட்டு உத்தரவை வாங்கிக்கொண்டு போங்கள் என்று கண்டிப்பாக சொல்லி

அனுப்பிவிட்டார். எனக்கு சேலம் மாநகராட்சி திட்டப்பிரிவு இஞ்ஜினியர் கலைவாணி மற்றும் கிளார்க் உஸ்மான் இருவருக்கும் அவர்கள் கேட்ட பணம் ரூபாய்.5,000/-ஐ அவர்களிடம் லஞ்சமாக கொடுத்து எனது வீட்டு மனை நிலத்திற்கு அப்ரூவல் உத்தரவு பெற விருப்பமில்லை. எனவே அவர்கள் இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு Sd xxxxxx 26.11.2018 (Tr.M.Arasu).

Sir, Received the above computer typed complaint on 26.11.2018 at 10.00 hrs. The genuineness of the complaint was verified through sources and found to be genuine and the integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. Hence, I registered a case in Salem Vigilance and Anti-Corruption Cr.No.18/AC/2018 u/s 7 (a) of Prevention of Corruption (Amendment) Act 2018 at 12.00 hrs today on 26.11.2018 and took up for investigation. Sd xxxx 26.11.2018 (S.CHANDRAMOULI), ADDITIONAL SUPERINTENDENT OF POLICE, V&AC, SALEM.

Original FIR along with original computer typed complaint of Tr.M.Arasu S/o.Muthusamy, 50, Mettu Vellalar street, Kondalampatti, Salem – 10 is submitted to the Special Judge for trial of cases under Prevention of Corruption Act, Salem and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

26/11/18

(S.CHANDRAMOULI),
ADDITIONAL SUPERINTENDENT OF POLICE
V&AC, SALEM.